# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,975 — 1933 ம் ஹூ சித்திரைமீ 7 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினால் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தேசாதிபதியவர்கள் ரோட்டு திருத்துதலாகிய ஒரு பகிரங்கதேள்வைக்கு வேண்டியதான பின்னர் சொல்லப்படும் காணியை எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி எனக்கு கற்பனைசெய்திருப்பதினால் :

பிரதமபடத்து இல. 20,155. தெமட்டக்கொடை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 41 | மாலிகாவத்தை ரோட்டு, 26 ம் நம்பர் பேரால் வரி கொடுக்கும் காணியின் பகுதி | 25–30 வருஷ 14 தென்னமரங்களும், 30 வருஷ ஒரு மாமரமும் உள்ள தோட்டம் | ஏ. எல். எம். அப்துல், லத்தீவு, ஏ. எல். எம். அப்துல் காடர், ஏ. எல். எம். அப்துல் காமிட் | 0 0 37·20 |

மேற்சொல்லப்பட்ட காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டியபிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஆண்டு மே மாசம் 2 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு நகரசங்க கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும் அவ்வுடந்தைகளுக்காகக் கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்விதபாத்தியமுடையவர்களென்றும், உறுதிகளாலும், பதிவுகொப்பிகளாலும், எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காக தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நகரசங்க கந்தோர்,
கொழும்பு, 1933 ம் ஹூ ஏப்பிரல்மீ 7 ந் திகதி.

டபிள்யு. எல். மோர்வி,
நகரசங்க சபாநாயகரும் கொழும்பு நகராதிகாரியும்.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவலப்பிட்டியா ஸ்டேசனில் வசிப்பதற்கான வீடுகள்கட்டுதற்கு எடுத்த நிலத்திற்குப் போகப்பாதையுண்டாக்கல் சின்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இல. 9,232. குறிச்சி—நாவலப்பிட்டியா நகரசங்க எல்லைக்குள், கண்டி டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பிறிட்ஜென்ட் எஸ்ரேற், காணியிலக்கம் 116 ம் 114 இன் பகுதியும், கம்பளைரோட் | தோட்டம் .. | பூஸ்ரெட் சகோதரர் .. | 0 0 14·27 |
| 3 | பிறிட்செண்ட்எஸ்ரேற், காணியிலக்கம் 54 இன் பகுதி கொத்மலேரோட் | றப்பர் தோட்டம் | ஷை .. | 0 0 12·17 |
| 4 | காணியிலக்கம் 85 இன் பகுதி, கம்பளை ரோட் | வெறுநிலம் .. | பிறவுன் கொம்பனியார் லிமிட்டெட் | 0 0 0·12 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனைஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ மே மாசம் 5 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1933 ம் ஹூ ஏப்றில்மீ 4 ந உ.

டபிள்யு. டி. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தொறகும்புற கிராமத்துக்காக சவக்காலை என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 49. குறிச்சி—துனுககாவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கெத்தியாகேனை .. | சேனை .. | கணங்கமுவா டபிள்யு. டிங்கிருலே, துனுககாவத்தை ஏச். எம். கிரிவண்டாவும், எச். எம். முத்துமெனிக்காவும் | 1 0 38·1 |
| 2 | ஷை .. | சேனை | ஷை .. | 0 0 5·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனைஞ்செய்யும்படி 1876 ம ஹூ-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ (மே) வைகாசிமீ 15 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1933 ம் ஹூ (மார்ச்) பங்குனிமீ 31 ந உ.

டபிள்யு. ஓ. ஸ்றீவன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தளை.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஊவா புளுககாகந்துறவில் கற்கட்டு நீர் வடிச்சலடியில் வெள்ளந் தடுக்கும் அணை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 1. குறிச்சி—வதுளை நகரசங்கத்தின் எல்லைக்குள்ளிருக்கும் பீலிபொத்தகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கெதறகாவகும்புற (நில வரி நொம்பர் 1356) | நெற்காணியும் கட்டும் .. | பீலிபொத்தகமவிலிருக்கும் டிசாணயக முதியான்செலாகே அப்புகாமி கமறாளையின் உரித்தாளர் | 0 0 3·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனைஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ வைகாசிமீ 11 ந் தேதியிலன்று சாயந்தரம் 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1933 ம் ஹூ பங்குனிமீ 30 ந உ.

ஈ. றீ. மிலிங்றன்,
அரசாட்சி ஏசண்டு, ஊவா.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.